www.tamilarangam.net

# ஈழச் செய்தி

# EELAM NEWS

*EPIC

(ESTD IN 1980) POST BAG 5551, MADRAS-600094, INDIA.


ஈழமக்களுக்கும், போராளிகளுக்கும்

உதவிட உருவாகியது தமிழர் நல மருத்துவ அமைப்பு

## MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS (MUST)

MEDICAL UNIT FOR SERVICE OF TAMILS .M.U.S.T.

ஈழ விடுதலை அமைப்புகளின் ஆதரவுடன் தமிழர் நல மருத்துவ அமைப்பு உருவாகியுள்ளது. ஈழப்பகுதிகளில் கொடிய நோய்கள் பரவி வருகின்றன. சிறீலங்கா வதைமுகாம்களில் ஒருவித தொற்று நோயைப் பரப்பும் ஊசி ஏற்றப்படுகிறது. வதைமுகாம்களால் மீண்டு வரும் ஈழத்தவரிடம் இந்த தொற்று நோய் ஏற்பட்டு மற்றவர்களுக்கும் பரவுகிறது. இதுதவிர இப்போது தமிழ் பகுதிகளுக்கு சிறந்த மருந்துகளை அனுப்புவதையும் ஆக்கிரமிப்பாளர்கள் நிறுத்தி வருகின்றனர். இவற்றால் தமது மருத்துவ தேவைக்கு எதிரியின் மருத்துவ அமைப்புக்களை நம்பி இருக்காது ஈழமக்களுக்கு மருத்துவ சேவை வழங்க தமிழர் நலமருத்துவ அமைப்பு உருவாகியுள்ளது. எதிரியோடு போரிடும் ஈழ போராளிகளுக்கு மருத்துவ உதவி வழங்கவும் மருத்துவ அமைப்பு ஒன்றின் தேவை எழுந்தது. எனவே ஈழவிடுதலை அமைப்புகளின் முயற்சியாலும் ஒன்றுபட்ட ஆதரவுடனும் தமிழர் நல மருத்துவ அமைப்பு தோன்றியுள்ளது. இந்த அமைப்பினர்- உலகெங்கும் வாழும் தமிழரிடமும், ஈழப் போராட்ட ஆதரவுச் சக்திகளிடமும் மருந்துகளை சேகரித்து வருகிறார்கள். தமிழர் நல மருத்துவ அமைப்புக்கு தாராளமாக உதவுவதுமூலம் ஈழ மக்களினதும், போராளிகளதும் நலனுக்கு உதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். உதவி செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்க.




ஆக்கிரமிப்பு படைகளால் தீக்கிரையாக்கப் பட்ட ஈழமக்கள் குடியிருப்பில் ஒன்று.

144 சூளைமேடு நெடுஞ்சாலை
சூளைமேடு
சென்னை-600094

SWISS இல் MUST உடனான தொடர்புகளுக்கு,

**EPIC (Branch)**
**Primelweg 20**
**3097 Liebefeld**
**Switzerland**

TEL NO 031. 531808.

ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலைய வெளியீடு
EELAM PEOPLE'S INFORMATION CENTRE PUBLICATION
LONDON BRANCH : EPIC B. M. Box 1738, LONDON WC1 N 3XX

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஸ்ரீலங்கா அரசின் நாசகாரச் சதி

## மத மோதலைத் தூண்டி மக்களைப் பிளவு படுத்தும் முயற்சி

ஈழத்துத் தமிழ் பேசும் மக்களிடையே பிளவை ஏற்படுத்தி, எமது விடுதலைப்போராட்டத்தை திசை திருப்பும் நோக்கத்தோடு ஸ்ரீலங்காஅரசு மத அடிப்படையில் மோதல்களைத் தூண்டி வருகின்றது. கடந்த சில நாட்களாக இலங்கையின் கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற வன்முறைச் சம்பவங்கள் சிங்கள இனவாத அரசின் நாசகார சதி முயற்சியால் உருவாக்கப் பட்டவையாகும். இஸ்ரேலிய உளவு ஸ்தாபனமாகிய 'மொசாட்'டின் சதியாலோசனையோடு இந்நாசகாரத் திட்டம் மேற்கொள்ளப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம். இஸ்லாமின் விரோதியான இஸ்ரேலுடன் கை கோர்த்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு ஈழ விடுதலைப் போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரானவர்கள் என்ற ரீதியில் விசமப் பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றது.

இஸ்லாமிய சமூகத்திலிருந்து எம்மை அந்நியப்படுத்தும் நோக்கில் கட்டவிழ்த்து விடப்படும் இந்தப் பிரச்சாரம் அபாண்டமானதோடு மிகவும் கேலிக் கூத்தானதாகும்.

விடுதலை இயக்கங்களின் ஆக்கபூர்வமான முயற்சிகளால் முஸ்லீம் மக்களுக்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களுக்கும் இடையே உறவுகள் வலுப்பெற்று வந்தன. முஸ்லீம் மக்களிடமிருந்து விடுதலைப் போராட்டத்திற்கு மேலும் மேலும் ஆதரவு திரண்டு வந்தது. இதனைக் கண்டு ஸ்ரீலங்கா ஆட்சியாளர்கள் திகிலடைந்தனர். இஸ்ரேலுடன் ஸ்ரீலங்கா அரசு நட்புறவு கொண்டமையால் ஆத்திரமடைந்த அரபு நாடுகள் தமது உதவியை நிறுத்தி வருகின்றன. பரந்துபட்ட முஸ்லீம் மக்களிடையே வளர்ந்து வரும் 'சியோனிச' எதிர்ப்புணர்வை திசைதிருப்புவதற்கும் எமது விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவதற்கும் முஸ்லீம் நாடுகளில் இருந்து உதவிகளைப் பெறுவதற்குமாகவே சிங்கள பௌத்த இனவாத அரசு திட்டமிட்டு இந்த மோதல்களைத் தூண்டி வருகின்றது.

கடந்த வருடம் ஸ்ரீலங்கா அரசு எமது போரட்டத்தை நசுக்கும் நோக்குடன் இஸ்ரேலிய உதவியை நாடி இராஜ தந்திர உறவை ஏற்படுத்திய போது முஸ்லீம் மக்கள் அதற்கெதிராக கிளர்ந்தெழுந்தனர். கிழக்கிலங்கையில் பரவலாகப் போராட்டம் வெடித்தது. இதை சகித்துக் கொள்ள முடியாத சிங்கள ஆட்சியாளர் அடக்குமுறை மூலம் அப்போராட்டங்களை மிருகத்தனமாக நசுக்க முயன்றனர் என்பதை முஸ்லீம் மக்கள் நன்கறிவர்.

பாலஸ்தீன மக்களின் நிலங்களை அபகரித்து, அவர்களை அகதிகளாக்கி மனிதகுலத்தின் வெறுப்புக்கு ஆளாகியுள்ள இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளருடன் ஸ்ரீலங்கா அரசு கூடிக்குலாவுகின்றது. பாலஸ்தீன மக்களின் விடுதலைப்போராட்டத்தை உறுதியாக ஆதரித்துவரும் தமிழீழ விடுதலைப்போராளிகளை முஸ்லீம் மக்களுக்கு எதிரான வன்முறையாளர்கள் என்று சித்தரிக்க முயற்சிக்கும் சிங்கள அரசின் சதித்திட்டம் ஒருபோதும் வெற்றிபெறப் போவதில்லை. மதஅடிப்படையில் தமிழ் பேசும் மக்களைப் பிளவு படுத்த ஸ்ரீலங்கா அரசு மேற்கொள்ளும் சதி முயற்சிகளுக்கு பலியாகாது விழிப்பாக இருக்குமாறு நாம் தமிழ் பேசும் மக்களைக் கேட்டுக்கொள்கிறோம்.

மதவேறுபாட்டுணர்ச்சியின்றி ஈழத் தமிழ்பேசும் மக்களிடையே காலம் காலமாக நிலவிவரும் பிரிக்கமுடியாத உணர்வுகளை தொடர்ந்தும் பேணிப்பலப்படுத்தி எமது விடுதலையை வென்றெடுக்க உறுதியுடன் செயற்படுவோமாக.

தமிழீழ விடுதலை இயக்கம் (TELO)

தமிழீழ விடுதலைப் புலிகள். (LTTE)

ஈழப் புரட்சி அமைப்பு (EROS)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (EPRLF)

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மே 11

மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகள் பொலீஸ் நிலையத்தின் மீது வெற்றிகரமான தாக்குதலை நடாத்தினார்கள். இத் தாக்குதலில் ஏராளமான பொலீஸ் அதிகாரிகளும் அவர்களது உதவியாளர்களும் கொல்லப்பட்டனர். மேலும் பொலீஸ் நிலையத்தில் இருந்து பல நவீனகர ஆயுதங்களையும் போராளிகள் எடுத்துச் சென்றனர்.

வல்வெட்டித்துறைப்பகுதியில் சுற்றி வளைப்பினை மேற் கொண்ட சிறீலங்கா கூலிப்பட்டாளங்கள் நெடியகாடு முதல் ஊறிய காடு வரை உள்ள பகுதிகளில் 20 லட்சம் பொருட்களை சூறையாடியும் 25 வீடுகளை எரித்தும் பல வீடுகள் குண்டுகள் வைத்து தகர்த்தும் உள்ளது. சுமார் 40 தமிழ் இளைஞர்கள் அறவியிலும் மீனவ கிராமங்களை அடுத்துள்ள நூல் நிலைய கட்டிடங்களுக்குள் 15 இளைஞர்களின் சடலங்கள் கிடக்க காணப்பட்டதாகவும் தெரிய வருகிறது. மேலும் பல பெண்கள் கற்பழிக்கப்பட்டும் வாகனங்கள் அடித்து நொருக்கப்பட்டும் உள்ளன. ஏராளமானோர் கைது செய்யப்பட்டும் உள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

மே 14

நாயன் மார்க்கட்டு பகுதியால் கால் நடை ரோந்து மேற் கொண்ட ராணுவத்தினர் ஏராளமான வாகனங்களையும் வீடுகளின் வேலிகளையும் எரித்துள்ளனர். பல பெண்கள் பலாத்காரப் படுத்தப் பட்டும் ஏராளமானோர் வீதி ஓரங்களில் முழங்காலில் இருத்தியும் வயோதிபர் ஒருவரை கொன்றும் உள்ளனர்.

மே15

சிறிலங்காவி கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சரத் முத்தெட்டுவேகமா கிழக்கில் இடம் பெற்ற சம்பவங்களுக்கு இஸ்ரேலின் பின்னணியில் சிறிலங்கா இனவெறி அரசே பொறுப்பு என சிறீலங்கா பாராளுமன்றத்தில் தெரிவித்தார் இப்பிரச்சனையினை ஆராய்வதற்கென தெரிவு செய்யப் பட்ட கொழும்பு மக்கட் பிரஜைகள் குழுவின் பொறுப்பாளரான ஜெயசிங்காவும் பிரச்சனைக்கு அரசே பொறுப்பு என தெரிவித்துள்ளார். சாதாரண உடையில் இருந்த இராணுவத்தினரே இப்பிரச்சனைக்கு வழி வகுத்தார்கள் எனவும் அவர் தெரிவித்தார்.

திருகோண மலையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிரே வந்து கொண்டிருந்த இராணுவ ஜீப்பினை நோக்கி புலிகள் சுட்டதில் மூன்று பொலீஸ் அதிகாரிகள் கொல்லப்பட்டனர். இதையறிந்த இராணுவத்தினர் அவ்விடத்திற்கு விரையும் வேளை அவர்கள் மீது தாக்குதலை தொடுத்தனர். இதில் அதிகாரிகள் உட்பட 10 பேர் கொல்லப்பட்டனர். இவற்றினை அறிந்த விமானப்படை ஹெலிகொப்டரில் அவ்விடத்திற்கு விரைந்தது. அதையும் எதிர்த்து தாக்குதல் மேற்கொண்டதால் அது பின் வாங்கி மறைந்து விட்டது.

நெடுந்தீவில் இருந்து குறிகட்டுவான் நோக்கிச் சென்று கொண்டிருந்த "குமுதினி" என்னும் படகில் ஏறிய ஆயுதம் தாங்கிய சிறிலங்கா காடையர்கள் அதில் இருந்த 60 பேரில் 33 பேரை படுகொலை செய்தும் மீதி 30 பேரை கொலை வெறியுடன் தாக்கியும் கடலில் தூக்கிப் போட்டு சித்திரவதை செய்தும் உள்ளனர். இவர்களை தாக்கும் போது கடல் படையினர் சாதாரண உடையிலேயே இருந்தனர். இவர்கள் வரும் போது இவர்களுடன் தொண்டர்கள் என்று அழைக்கப்படும் குண்டர்களையும் அழைத்து வந்தனர். சிறீலங்கா கூலிப் பட்டாளங்களால் மூன்று வயது சிறுமியும் கொலை செய்யப்பட்டுள்ளார். எமது ஈழ எதிர் காலச் சந்ததியினர் எதிர்காலக் கனவுகள் சிதைக்கப்பட்டு வாழ்கின்றனர் எனபதற்கு இச் சிறுமியும் ஓர் உதாரணமாகும். மேலும் கடலில் 35 பெண்கள், 40 ஆண்கள் உட்பட குழந்தைகளும் கொல்லப் பட்டன. இப்படுகொலைகள் கடந்த சில காலத்தினுள் நிகழ்ந்துள்ளது.

www.tamilarangam.net

மே 15

சிறிலங்கா அரசின் திட்டமிடப்பட்ட நடவடிக்கையால் ராணுவ தாக்குதல்களுக்கும் இடிபாடுகளுக்கும் உட்பட்டு எரியூட்டி அழித்தொழிக்கப் பட்ட யாழ் நூல் நிலையம் மீண்டும் புத்துணர்வு பெற்று புதுப் பொலிவுடன் இயங்கி வந்தது. இந்நூல் நிலையத்தினை உடனடியாக மூடி விட உத்தரவு பிறப்பிக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

கிழக்கு ஈழத்தில் இடம் பெற்ற சம்பவங்களால் தமிழ் முஸ்லீம் ஒற்றுமையினை குலைக்க முயன்றுள்ளது இனவாத அரசு. ஆனால் தமிழரும் நாமும் மதத்தால் மட்டுமே வேறு வேறு பட்டுள்ளோம். எம்மைத் தமிழர்களிடமிருந்து பிரிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் அனைத்தையும் நாம் கண்டிக்கின்றோம். எம்மைப் பிரிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளினால் எமது ஒற்றுமையை வலுவாகி உள்ளது என்று வவுனியா மாவட்ட முஸ்லீம் அபிவிருத்தி சங்க செயலர் ஜனாப் எம் காசிம் தெரிவித்துள்ளார்.

மே 16

அனுராதபுரத்தில் தமிழ் மக்கள் காடையர்களின் காட்டுமிராண்டித்தனத்திற்கு பலியானதாகவும் ஏராளமான வீடுகள், கடைகள் எரிக்கப்பட்டதாகவும் செய்திகள் கிடைத்துள்ளன. இப் படுகொலைகள் 150 சிங்களவர் பலியானதிற்கு பழிவாங்கும் கொடுக்குமுகமாக நிகழ்ந்தன. அனுராதபுரத்தில் கொலை செய்யப்பட்ட 50 தமிழர்களையும் அவர்கள் வீடுகளை விட்டு விரட்டி விரட்டி சுட்டுக் கொன்றனர். இதனால் பீதியடைந்த ஏழைய தமிழர்கள் வவுனியாவிற்குள் ஓடி வந்து கொண்டிருந்தனர். உயிர்களையும் கொலை செய்ய சிறிலங்கா அரசு இப்பகுதியில் ஊரடங்குச் சட்டத்தினையும் அமுல் செய்தது.

அனுராதபுரம் பெரும் தெருக்கள் திணைக்களத்தின் 8 பொறியியலாளர் காடையர்களால் தாக்கப் பட்டுக் கொல்லப்பட்டனர். இதில் ஒருவர் உரும்பிராயைச் சேர்ந்த பாலசுந்தரம் சிறிலங்கா இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டவர்கள்,
மாங்கோ புகையிரத நிலைய பொறுப்பதிகாரி
மதவாச்சி உதவி அரசாங்க அதிபர்
வவுனியா அரசாங்க அதிபர். குணநாயகம்.

மே 18

ஆனைக் கோட்டையில் சோதனை இடப் போவதாக வீடு ஒன்றிற்குள் புகுந்த கொலை வெறி இராணுவத்தினர் அங்கிருந்த 5 இளைஞர்களை சுட்டுக் கொன்றனர். மேலும் நால்வரை கைது செய்தும் சென்றனர்.

அக்கரைப்பற்றில் வீடு ஒன்றிற்குள் பொலிஸ் அதிகாரிகள் செல்வதற்கு முயன்ற போது வீட்டில் இருந்து துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதாகவும் பின் பொலீசாரும் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகவும் இந்த மோதலில் பல பொலீஸ் அதிகாரிகள் கொல்லப் பட்டதாகவும் தெரிய வருகிறது. இதைத் தொடர்ந்து 10 கடைகள் எரிக்கப் பட்டதாகவும் 20 இளைஞர்கள் கைது செய்யப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மே 19

அனுராதபுரத்தில் நடைபெற்ற அப்பாவிச் சிங்கள மக்கள் படுகொலைகளை எதிர்த்து ஒன்றிணைந்த விடுதலை அமைப்புக்களான ஈழப்புரட்சி அமைப்பு, தமிழீழ விடுதலை இயக்கம், தமிழீழ விடுதலை புலிகள், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி ஆகிய அமைப்புக்கள் அறிக்கையினை வெளியிட்டுள்ளன. அதில் தமிழர்கள் சிங்கள மக்களை என்றும் எதிரியாக கருதவில்லை என்றும் சிங்கள மக்களும் ஒடுக்கப் படுகின்றார்கள் என்பதையும் விளக்கி வெளியிடப்பட்டிருந்தது.

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்

20

www.tamilarangam.net

அம்பாறையில் திடீரென லாரிகளில் வந்த சிங்கள குண்டர்கள் பொருட்களை சூறையாடியும் 16 பேரை வெட்டியும் கொலை செய்துள்ளனர். இன்னுமோர் சம்பவத்தில் ஊரடங்கு அமுலில் இருந்த வேளையில் பலர் கொல்லப்பட்டனர். இந்த நடவடிக்கைகளுக்கு இங்கிலாந்தின் கமாண்டோக்களினால் பயிற்சி அளிக்கப்பட்ட களப்படை என்னும் பிரிவே பொறுப்பு எனவும் தெரிய வருகிறது.
மேலும் புததளத்தில் 7 பேரின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டும் உள்ளன.

யாழ்ப்பாணம் ரீகல் தியேட்டரில் படம் பார்த்துக் கொண்டிருந்த 20 தமிழ் இளைஞர்களை சிங்கள அரச ராணுவ உதவி மூலம் விசாரணைக்கென கைது செய்து சென்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கோட்டையை நோக்கி வெடிகுண்டுகளுடன் சென்று கொண்டிருந்த ஓர் லொறியினை சிறீலங்கா ராணுவம் தடுத்து இளைஞர்கள் யாராவது இருக்கின்றார்களா என்று சோதனையிட முற்பட்ட போது அதிலிருந்த குண்டு வெடித்து ஐவர் இறந்தனர். அவ் லொறியினை ஓட்டி வந்தது யார்? எங்கிருந்து வந்தது என்ற விபரங்களை அறிய ராணுவம் பல வழிகளில் முயன்று வருகிறது.

மே 21

ரயில் பஸ் போக்குவரத்துக்காகவும் மட்டுநகருடனான முக்கிய தொடர்பினை வைத்துக் கொள்வதற்குமென அமைக்கப்பட்டிருந்த முக்கிய பாலமான மன்னம்பிட்டிய பாலம் ஈழ விடுதலைப் போராளிகளினால் தகர்க்கப் பட்டுள்ளது. இதில் பாலத்தினை காவல் புரிந்த இரு பொலீசாரும் கொல்லப்பட்டனர்.

விடுதலைப் போராளிகளை ஒடுக்குவதற்காக சீனா, அமெரிக்கா, பிரிட்டிஷ் போன்ற நாடுகளில் இருந்து வரும் ஆயுதங்களை பாகிஸ்தான் விநியோகம் செய்கிறது. அண்மையில் சீனாவில் இருந்து ஏராளமான ராணுவ உபகரணங்களை சிறீலங்கா பெற்றது. "9 ஜோகர்" ரோந்துப் படகுகளும் பிரிட்டனிடமிருந்து ஏர்கிராப்ட்( ) விமானத்தினையும் 19 ரோந்துப் படகுகளையும் பல நவீன துப்பாக்கிகளையும் பெற்றதாக எமக்கு தகவல் கிடைத்தது.

மே 20

மகாவலி குடியேற்றத்தில் இருந்து 61 பொறியியலாளர் குடும்பம் வெளியேற்றம்.
மாதுறு ஓயா மன்னம்பிட்டிப்பாலம் தகர்ப்பு. இதில் 4 பொலீஸ் இறந்தனர். 4 பொலீஸ் காயம் அடைந்தனர்.
கிரான் என்ற இடத்தில் 5 பொலீஸ்சார் தீவிரவாதிகளினால் சுட்டுக் கொல்லப் பட்டனர். 4 பாதுகாப்புப் படை உத்தியோகத்தினர் காயம் அடைந்தனர்.

மே 22

இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சோவியத் யூனியனுக்கு விஜயத்தினை மேற்கொண்டார். அவர் அங்கு சோவியத் அதிபருடன் பேசுகையில் இலங்கையின் பிரச்சனையால் இந்து மா கடல் இராணுவ குவிப்பு ஏற்பட்டுள்ளதாகவும் இந்து மா சமுத்திரம் ஓர் போர்க்களமாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதென்றும் கூறினார்.

நிலாவெளியில் இராணுவப் படையும் கடற் படையும் சென்று கொண்டிருந்த போது தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இவர்கள் தாக்குதலில் ஈடுபட்ட போது அதில் இரண்டு விடுதலைப் புலிகள் இறந்தனர். இறந்தவர்களில் திருவர் குலம் என்பவர் ஒருவர். மற்றவர்கள் தப்பியோடி விட்டனர்.

www.tamilarangam.net

அனுராதபுரத் தாக்குதலை விடுதலைப்போராளிகளே மேற் கொண்டதாக பறை சாற்றிய சிறீலங்கா அரசு அவர்கள் இப்பகுதியிலேயே இருக்கின்றார்கள் நாம் அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கூறி வவுனியாவிற்கும் அநுராதபுரத்திற்கும் இடையே உள்ள செட்டிகுளப் பகுதியில் வாழும் சுமார் 25 ஆயிரம் தமிழ் மக்களை ராணுவம் விரட்டியடித்துள்ளது. சிறிது காலத்திற்கு முன் முல்லைத் தீவில் இருந்து ஏராளமான தமிழர்கள் தம் வீடுகளை விட்டு விரட்டியடிக்கப்பட்டனர். தமிழர்களை விரட்டியடித்து தமிழ் மக்கள் வாழ்ந்த பகுதிகளில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவவுள்ளது பாசிச அரசு. என்பதனை நாம் திட்டவட்டமாக அறிவோம். தாம் நிரந்தரமாக வாழ்ந்த பகுதிகளில் இருந்து இவர்கள் வெளியேற 2 வார காலக் கெட்டினை விதித்துள்ளது எனவும் தெரிய வருகிறது.

சிறீலங்கா பயங்கரவாத தலைவர் இந்தியப் பிரதமரோடு பேச்சுவார்த்தை நடாத்த இந்தியா செல்கிறாராம். அவர் வருகையின் முன்னேடியாகவே விடுதலைப் போராளிகளுடனான பேச்சு வார்த்தை நடைபெறும் என்றும் தெரிய வருகிறது. இது ஒரு புறம் இருக்க இலங்கையில் இராணுவ சட்டத்தினை அமுல்படுத்தப் போவதாக ஜெயவர்த்தனா மிரட்டியுள்ளார். பேச்சு வார்த்தையில் நம்பிக்கை கொண்ட அதிபன் ஜெயவர்த்தனே இராணுவ ஆட்சியை அமுல் படுத்தப் போகிறார். தற்பொழுது ஈழத்தில் எந்த விதமான ஆட்சி நடைபெறுகிறது என்பதை ஏகாதிபத்திய கூண்டில் நிற்கும் ஜெயவர்த்தனா அறியவில்லைப் போலும்.

வடக்கிலும் தமிழர் விரட்டியடிக்கப் பட்ட பகுதிகளிலும் குடியமர்த்துவதற்கென 2 லட்சம் சிங்களக் காடையர்களுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. தமிழர் பிரச்சனைக்கு தீர்வு காண முடியாத ஆட்சியில் உள்ள அரசு ராஜினாமா செய்ய வேண்டும் என்று முன்னாள் பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்க தெரிவித்துள்ளார். இதற்கிடையில் அரசுக்கெதிராக பௌத்த காந்தியர்கள் ஆர்ப்பாட்டம். நடாத்தியுள்ளனர்.

<u>மே 24</u>

இந்த நேரத்தில் பல்வேறு இடங்களில் [illegible] நடாத்தி வரும் போராளிகள் எந்த [illegible] பயங்கரவாதிகள் போர் நிறுத்த நிகழ்ச்சியத்திற்கு சுமார் 80 ஆயிரம் பேர் [illegible].

சிறீலங்காவில் விடுதலைப் போராளிகள் தாக்கியதாக கூறப்படும் சம்பவத்தில் அமெரிக்க உளவு நிறுவனத்தைச் சேர்ந்த உளவாளிகளும் சிறீலங்காவின் கொலைச் சதிக்கு நிபுணத்துவம் வழங்குபவர்களும் மதுறு ஓயாப் பகுதியில் குடியமர்ந்து இருந்தனர். அப்பகுதியில் நடாத்தப் பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பீதியடைந்த அரசு அவர்களை கெலிகொப்டர் மூலம் பாதுகாப்பான இடங்களுக்கு உடனடியாக மாற்றியது.

கல்முனை அருகே கடந்த 17ம் திகதி 40 இளைஞர்கள் சிங்கள இராணுவத்தால் கொலை செய்யப்பட்டதை உலக நாடுகளுக்கு அம்பலம் செய்ததாக கருதி மக்கள் கமிட்டி தலைவர் நல்லநாயகம் இனவெறி அரசினால் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

EELAM PEOPLE'S INFORMATION CENTRE
POST BAG NO. 5551
MADRAS - 600 094.
*INDIA*

EPIC (Branch)
Primelweg 20
3097 Liebefeld
Switzerland

தமிழ் தேசிய ஆவணச் சுவடிகள்